வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE INC.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

# தமிழ் அறிவுப் போட்டி 2023
# ஆண்டு - 5

# மாதிரி வினாக்கள்

1. பூனை சீறும் என்பது போல் குயில்

.........................?

**விடை:**

கூவும்

2. தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களில் இரண்டைக் கூறுக?

விடை:

கிளித்தட்டு, சடுகுடு

- போர்த் தேங்காய் அடித்தல்,
- வண்டிச் சவாரி,
- ஜல்லிக்கட்டு

3. “ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”

என்ற திருக்குறளின் பொருள் என்ன?

**விடை:**

ஒழுக்கம் உயிரிலும் மேலானது

4. தமிழ் அரச மொழியாக உள்ள நாடுகள் மூன்றின் பெயர்களைக் கூறுக?

விடை:

இலங்கை

சிங்கப்பூர்

இந்தியா (மாநில அரசில்)

5. பின்வரும் வசனத்தைப் பொருத்தமான சொல்லைக் கொண்டு நிறைவு செய்க?

நாங்கள் நாளை கடைக்குப்

............................................

**<u>விடை:</u>**

# போவோம்

6. ‘தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்’

என்ற பாடலை இயற்றியவர்?

**<u>விடை:</u>**

பாரதிதாசன்

7. தமிழ் இலக்கணத்திலுள்ள மூன்று காலங்களும் எவை?

விடை:

இறந்தகாலம்,

நிகழ்காலம்,

எதிர்காலம்

8. உங்கள் தந்தையின் தம்பியை

நீங்கள் எவ்வாறு அழைப்பீர்கள்?

**<u>விடை:</u>**

சித்தப்பா

9. நான்கு திசைகளையும் கூறுக?

**விடை:**

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு

10. ‘அவை’ என்ற பன்மைச் சொல்லின் ஒருமை வடிவம் எது?

**விடை:**

அது

11. இடைவெளியை நிரப்புக:

நோயற்ற வாழ்வே ............... ..................

விடை:

குறைவற்ற செல்வம்

12. ஒருவர் தனது வரலாற்றைத் தானாக எழுதுவதை எப்படி அழைப்பர்?

**விடை:**

சுயசரிதை

13. வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

1. 1984
2. 1988
3. 1979

**விடை:**

2. 1988

14. தசாவதாரத்தில் எத்தனை அவதாரங்கள் உண்டு?

விடை:

பத்து

15. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

என்ற பாடலை இயற்றியவர் யார்?

விடை:

ஔவையார்